முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் திருமாழிசை ஆழ்வார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

15.01.2019, செவ்வாய்க்கிழமை

1. **கருணாமூர்த்தியே கந்தமகா சக்தியே**
**கலிகால மக்களை காக்கவே**
**தருமம் செய்து யுகம் மாற்ற**
**தவசியாக வந்த அண்ணலே**

2. அண்ணலே உன் பெருமை கூறி
அகிலமதில் ஒளி சூட்சும நூலை
நன்னயமாய் **விளம்பி கலை திங்கள்**
**நாட்டிட ஏகதிகதி குசன் வாரம்**
**(விளம்பி வருடம் தை மாதம் 1ம் நாள் 15.01.2019, செவ்வாய்க்கிழமை)**

3. **வாரமதில் திருமாழிசை ஆழ்வார் யானும்**
வழங்குவேன் உலகோர் நலமுற
சோரமிலா தொண்டர் படையை
சுத்தநெறி கொண்டு உருவாக்கி

4. உருவாக்கி சன்மார்க்க நெறி
உலகமெங்கும் பரப்பி வர
குருவரங்கன் சொல்லும் வேதம்
குவலயத்தை ஆளும் என்பேன்

5. என்கவே அரங்கன் சீடர்களென
எல்லா தேசமும் பரவி நின்று
சன்மார்க்க விதி முறைகளுடன்
சகலருக்கும் சமத்துவநிலை பெருகி

6. பெருகியே உலகம் எங்கும்
பேதமிலா ஒரே குலமாகவே
முருகன் ஆளுமை கொண்டநல்
முழுமை பெற்ற ஞானியாம் அகத்தியர் குலமாக

7. குலமாக பரவி குவலயமே
குருராசன் மூலம் ஒன்றிணையும்
பலமான ஞானஆட்சியாக மாறி
பாருலகே வளம்பல காணும்

8. காணவே மேல்நிலை பெற
கலியுகத்தில் பொய்நிலை மாற
ஞான தேசிகனாரிடம் தீட்சை
ஞாலமுடன் முழுமதி பூசை காலம்

9. காலமதில் வந்து ஏற்று
கலியுகத்தார் வணங்கி வருக
கோலமதாய் ஞானிகள் பூசையை
குடியவர்களுடன் இணைந்து செய்ய

10. செய்யவே அவரவர் வாழ்விலும்
சிறப்பான நிலைகள் காண்பதுடன்
மெய்ஞானம் மனபலம் பெருகி
மேலவர்கள் துணை கொண்ட ஞானி

11. ஞானி அரங்கனே கலியுகத்தில்
ஞானபண்டிதன் சக்தி கொண்டு
ஞானிகளை உருவாக்கும் ஞானி எனும் உண்மை
நம்பகமுற உணர அறிய நேரும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் திருமழிசை ஆழ்வார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

கருணையே வடிவான கருணாமூர்த்தியே கந்தமகா சக்தியே கலியுகத்தின் கோரப்பிடியினுள் சிக்கி தவிக்கின்ற மக்களை காத்து ரட்சிக்கவே தர்மங்கள் செய்து இவ்வுலகை தர்ம உலகமாக மாற்றிடவே தர்மயுகமான ஞானயுகம் படைக்கவே மகா தவசியாக வந்துதித்திட்ட அண்ணலே முருகப்பெருமானின் அவதார ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் தை மாதம் 1ம் நாள் 15.01.2019, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே திருமழிசை ஆழ்வார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் திருமழிசை ஆழ்வார்.

குற்றமற்ற தொண்டர் படையை அரங்கா உமது சுத்தநெறி மூலம் உருவாக்கி தூய தொண்டர்கள் மூலம் உலகமெலாம் சன்மார்க்க நெறியினை அற்புதமாய் பரப்பி வருகின்றாயப்பா. குரு அரங்கன் சொல்லும் ஞான கட்டளைகளே வேதங்களாக வேதவாக்குகளாக ஆகி இவ்வுலகை ஆளும் என்பேனப்பா.

உலகின் பல பகுதிகளிலும் அரங்கனைப் பின்பற்றி அரங்கனின் சீடர்கள் எல்லா தேசங்களிலும் பரவி நிற்பார்கள். ஆதலினால் உலகமெலாம் சன்மார்க்கவாதிகள் பரவி நிற்கும் சகல மக்களுக்கும் சமத்துவ நிலை பெருகி நின்று உலகமெங்கும் பேதாபேதங்களான வேற்றுமைகளும், பாகுபாடுகளும் நீங்கி உலகமே பேதாபேதம் இல்லாத ஒரே குலமாக ஆகி முருகப்பெருமானின் ஆட்சியின் கீழ் முழுமை பெற்ற மகா ஞானி அகத்தியர் குலமாக பரவி நிற்கும்.

அரங்கனின் கொள்கைகளால் உருவான அகத்தியர் குலம் உலகமெலாம் பரவி அரங்கமகா தேசிகனாரின் மூலமாக ஒன்றிணையும். ஒன்றிணைந்து பலம்மிக்க ஞான ஆட்சியாக மாறி இந்த பேருலகமே இயற்கை பேரிடர்கள் இல்லாது போய் பலவிதமான வளங்களையும் கண்டு சிறப்படையும்.

கலியுகத்திலும் மக்கள் மேல்நிலையை அடைந்திட வேண்டுமாயின் கலியுகத்தின் மாயையான பொய்நிலைகள் மாறிட அவரவரும் ஞானதேசிகன் ஆறுமுக அரங்கரிடத்து தீட்சை உபதேசம்தனை அடைந்து அரங்கன் உலக நலன் கருதி பௌர்ணமி தோறும் நடத்தும் பௌர்ணமி சிறப்பு சித்தர்கள் பூசை கலந்து ஏற்றுக் கொண்டு குடும்பத்தினருடன் ஞானிகளை வணங்கி வர வேண்டும்.

இவ்விதமே செய்பவர்கள் வாழ்வினுள் சிறப்பான நிலைகள் எல்லாம் உண்டாவதுடன் மெய் ஞானபலம் பெருகும், மனோபலம் பெருகும், ஞானிகளின் துணை கொண்ட ஞானவான் ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனே கலியுகத்தினுள் முருகப்பெருமானின் சக்தியெல்லாம் தன்னகத்தே கொண்டு உலகினில் ஞானிகளை உருவாக்கும் மகா ஞானியாவார் என்ற அரும்பெரும் உண்மையை உலகமே நம்பிக்கையுடன் அறிந்திட நேருமப்பா, அவரே மகா ஞானி என உலகறிய தமது ஒளி சூட்சும நூல் மூலம் உரைக்கின்றார் மகான் திருமழிசை ஆழ்வார்.

–சுபம்–